

விழுப்புரம் மாவட்டம் செஞ்சிக்கோட்டையில் பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். அருகில் ஆரணி எம்.பி. தரணிவேந்தன், கூடுதல் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய் நாராயணன் உள்ளனர்.

### தமிழ்நாடு முதலமைச்சராக தளபதி பொறுப்பேற்ற பிறகு

# நீர்நிலைகள், காற்று - மாசு முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது!

### புதுக்கோட்டையில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேட்டி!

புதுக்கோட்டை செப் 28-

தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை, தன்னார்வ அமைப்புகள் உள்ளிட்டவைகள் ஒன்றிணைந்து 32 மாவட்டங்களில் ஒரு கோடி பனை விதைகளை நடவு செய்கின்ற இலக்கை நோக்கி பல்வேறு மாவட்டங்களில் பனை விதைகள் நடவு செய்கின்ற பணிகள் நடைபெற்று வருகிறது.

அதேபோல் புதுக்கோட்டை மாவட்டத்தில் கவிநாடு கண்மாயில் பனை விதைகள் நடவு செய்கின்ற பணியை தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில்தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தொடங்கி வைத்தார். மேலும் இதில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அருணா புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை முத்துராஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு பனை விதைகளை நடவு செய்தனர்.

அப்போது செய்தியாளர்களை சந்தித்த தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசுகையில்:

தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை, தன்னார்வ அமைப்புகள் உள்ளிட்டவைகள் ஒன்றிணைந்து 32 மாவட்டங்களில் ஒரு கோடி பனை விதைகளை நடவு



செய்கின்ற இலக்கை நோக்கி பல்வேறு மாவட்டங்களில் பனை விதைகள் நடவு செய்கின்ற பணிகள் நடைபெற்று வருகிறது.

அதேபோல் புதுக்கோட்டை மாவட்டத்தில் கவிநாடு கண்மாயில் பனை விதைகள் நடவு செய்கின்ற பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. ஒரே நாளில் மாவட்டம் முழுவதும் ஒரு லட்சத்து 70 ஆயிரம் பனை விதைகள் நடவு செய்கின்ற பணி நடைபெற்று வருகிறது. மாவட்ட ஆட்சியர் 7 லட்சம் பனை விதைகளை சேகரித்து வைத்துள்ளார். இந்த ஏழு லட்சம் பனை விதைகளும் ஒரு வார காலத்திற்குள் நடவு செய்யப்பட்டு கூடுதலாக தமிழ்நாட்டில் அதிக பனை விதைகளை நடவு செய்கின்ற மாவட்டமாக புதுக்கோட்டை என்கின்ற இலக்கை நோக்கி பணிகள் நடைபெற்று வருகிறது.

பயோ மைனிங் 249 இடங்களில் நடைபெற்றது. 145க்கும் மேற்பட்ட இடங்களில் முழுமையாக பயோ மைனிங் முறையில் குப்பைகள் அகற்றப்பட்டு அந்த இடங்கள் உயிர் நிலங்களாக மீட்கப்பட்டு மியோ ஹாக்கி முறையில் குறுங்காடுகள் அமைக்கப்பட்டு நிலத்தை மீட்டெடுக்கின்ற வகையில் 200 கோடி ரூபாய் சொத்துக்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. இதைத்தவிர மற்ற இடங்களிலும் பணிகள் நடைபெற்ற வருகிறது. விரைவில் பயோ மைனிங் முறையில் எங்கே எல்லாம் நடைபெற்றதோ அங்கே எல்லாம் முழுமையாக குப்பைகள் பிரித்தெடுக்கப்பட்டு அந்த இடங்கள் உயிர் நிலங்களாக மீட்கப்படும்.

கார்பன் அதிகளவு வெளியேற்றத்தின் காரணமாக இன்று குளோபல் வார்மிங் ஏற்பட்டு தற்போது கூட வெயில் அதிகளவு உள்ளது. மேலும் அதன் மூலமாக பல்வேறு பேரிடர்களை சந்தித்து வருகிறோம். குறிப்பாக புயல் வெள்ளங்களைக் கடந்து அண்மையில் கேரளாவில் ஏற்பட்ட நிலச்சரிவு என பல்வேறு பாதிப்புகளை சந்தித்து வருகிறோம். தற்போது செப்டம்பர் மாதத்தில் கூட 40 டிகிரி செல்சியஸில் வெயிலின் தாக்கம் உள்ளது. அதனால் தமிழ்நாடு முதலமைச்சர் முதற்கட்டமாக பசுமையான தமிழ்நாடாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு 23 சதவீதம் தமிழ்நாட்டில் உள்ள வனப்பரப்பை 33 சதவீதமாக உயர்த்துவதற்கு பசுமை தமிழகம் என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார். தற்போது இரண்டாம் ஆண்டு விழாவை தொடங்கி வைத்துள்ளோம். அந்த அடிப்படையில் இதுவரை 7 கோடி மரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 10 கோடி மரங்கள் நடவு செய்ய இலக்கு நிர்ணயம் செய்து அந்த பணிகளை தொடங்கியுள்ளோம். அதேபோல் கடலோரப் பகுதிகளில் கடல் அரிப்பை தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள ஈர நிலங்களை மீட்ப தற்காக நடவடிக்கைகள் இந்தியாவில் தமிழ்நாட்டில் தான் 16 ராம்சார் சைட் கண்டறியப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சராக தளபதி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு நீர்நிலைகள் காற்று மாசு முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இயற்கை சூழ்ந்த பூமியாக, பசுமை சூழ்ந்த பூமியாக வனத்துக்குள் தமிழ்நாடு என்ற நிலையை நோக்கி தமிழ்நாடு முதலமைச்சர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் என்று தெரிவித்தார்.

### காஞ்சிபுரத்தில் தி.மு.க. பவள விழா மாபெரும் பொதுக்கூட்டம்!

# மயிலாடுதுறை மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வோம்!

### மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

மயிலாடுதுறை, செப். 28-

காஞ்சிபுரத்தில் திமுக கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் தி.மு.க. பவள விழா மாபெரும் பொதுக்கூட்டம். மயிலாடுதுறை மாவட்ட கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வோம். மயிலாடுதுறைமாவட்ட செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தி.மு.க. பவள விழாவை முன்னிட்டு இன்று



(28.09.2024 - சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி திடலில் தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் சிறப்புரை ஆற்ற உள்ளார். அது சமயம் இக்கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர், சட்டமன்றமுன்னாள் இந்நாள் உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி பிரதி நிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள். வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பிஎல்ஏ). பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பிஎல்சி) மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறுதமது அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம் முருகன் எம்.எல்.ஏ கூறி உள்ளார்.

### திருத்துறைப்பூண்டி ஒன்றிய முன்னாள் துணைசெயலாளர்

# பி.வி.சுப்பிரமணியன் மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!



திருவாரூர்,செப்28-

திருத்துறைப்பூண்டி ஒன்றிய முன்னாள் துணை செயலாளரும், கரும்பியூர் கிளை கழக செயலாளருமான பி.வி.எஸ். என்று அழைக்கப்பட்ட பி.வி.சுப்பிரமணியன் காலமானார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். மறைந்த பி.வி. சுப்ரமணியன், கிராம நிர்வாக அலுவலராக இருந்து ஓய்வு பெற்று கழக பணியாற்றியவர்.

பணியில் இருக்கும் போது ஏழை எளிய மக்களுக்கும், கழகத்தினருக்கும் முடிந்த உதவிகளை செய்து பொதுமக்களின் நன்மதிப்பை பெற்றவர். கழக நிகழ்வுகள் அனைத்திலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்பவர். அன்னாரின் மறைவின் தகவல் அறிந்த மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., ஒன்றிய செயலாளர் ப.பிரகாஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.பாண்டியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், கழக உடன்பிறப்புகளும் மறைந்த பி.வி. சுப்ரமணியன் உடலுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவர் அணி இணை செயலாளருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, வளவனூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டியை மாணவ – மாணவிகளுக்கு வழங்கினார். உடன் பேரூராட்சி மன்றத் தலைவர் மீனாட்சி ஜீவா, கண்டமங்கலம் ஒன்றிய குழு பெருந்தலைவர் வாசன், வளவனூர் பேரூராட்சி செயலாளர் பா.ஜீவா, செயற்குழு உறுப்பினர் சம்பத், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுவை சுரேஷ், பொருளாளர் ரகுமான், துணைத் தலைவர் அசோக், மன்ற உறுப்பினர் மகாலட்சுமி, வடிவேல், பாஸ்கரன், பார்த்திபன், திரிசங்கு, கீதா செந்தில், ஒன்றிய பிரதிநிதி சுஜேந்திரன், வார்டு செயலாளர்கள் ராம்குமார், விஜயகுமார், பெரியசாமி, சர நாராயணன், இளங்கோ, ராஜா சம்பத், குமார், பெற்றோர் – ஆசிரியர் சங்க தலைவர் ராஜேந்திரன், அ.கோ.ராசன், வழக்கறிஞர் ஜெயபால், நிர்வாகிகள் பரமசிவம், சற்குணராஜ், பாஸ்கரன், சிவானந்தம், சு.முருகன், டி.எஸ். ஆனந்த், சிவகுமார், ராஜேஷ், மாணிக்கம், காந்தாரவ், நடராஜன், ரஞ்சித் குமார், விவேக், பிரபாகரன், மாணிக்கம், பொன்முடி, தீர்த்தமலை, குமரவேல் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# பல்லவர் தலைநகரில் பவளவிழா!

" தலைவரில்லை முன்னேற்றக் கழகத்திற்கு!
என் தலைவரிருந்த நாற்காலி காலியாக இருக்கும்!
என் தலைவரவர் என்றேனும் ஓர் நாள் வந்தமர்வார்!
அதுவரையில் காத்திருப்பேன்!"

என்று அன்று கொட்டும் மழையில், ராபின்சன் பூங்காவில் கொள்கைவீரர்கள் சூழ்ந்திருந்த வேளையில் அறிவுலகமா மேதை அண்ணா அவர்கள் அறிவித்து, ஆரம்பித்த, திராவிட முன்னேற்றக் கழகம், இன்று அந்த அண்ணனை, பண்பின், பாசத்தின் மன்னனைத் தந்த காஞ்சிமாநகரில் தனது பவள விழா கொண்டாட்டத்தை, கொள்கைக்கும், கொற்றத்திற்கும் தோள்தரும், தோழமைக் கட்சியினர் வாழ்த்துரைக்க, வரும் செப்டம்பர் 28 சனிக்கிழமை மாலை கொண்டாடி, மகிழவிருக்கிறது!

"கண்ணீர் துளிகள்" என்றும், "இதுகள்" என்றும், ஏட்டில் ஏற்றிட முடியா ஏளனச்சொற்கள், ஏச்சுக்கள், பேச்சுகளால் வாடிப்போகாமல், வலிமைபெற்று வளர்ந்த இயக்கம், அரசியல் புயல், பூகம்ப, சூறாவளி, பெருவெள்ளங்களைக் கடந்து, கம்பீரமாய் காட்சி தருகிறது.

40 வயதிலே ஒரு பொதுச்செயலாளர், அவரை பின்பற்றும் 25, 26 ,27, என முப்பதிற்குள்ளான வயதுடையோருடன் துவக்கப்பட்ட இயக்கம்,

அண்ணாவின் கண்ணியம்மிக்க, குடும்பபாச, அண்ணன் தம்பியர் உறவோடு, கட்டுப்பாடு காத்து, கண்துஞ்சாமல், கடமையை செய்ததால், தமிழகத்தின் முன்னணி நிலை பெற்று, தமிழகத்தின் தவிர்க்க முடியாத இயக்கம் எனும் நிலையை அடைந்தது.

இன்றிருக்கும் அறிவாலயம் போன்று நமது கழகத்திற்கு தலைமை அலுவலகம் எனப் பெரிதாக சொல்லிக் கொள்ளும் கட்டிட வசதிகள் அன்றில்லை.

சென்னை ராயபுரம் சூரியநாராயண செட்டி தெருவில் அமைந்திருந்த ஒரு வாடகை கட்டிடத்தின் கீழ் தளத்தில் கழக அலுவலகம், அங்கேயே, நம்நாடு பத்திரிகை அலுவலகம். அண்ணா சென்னை வந்தால், மாடியிலே தான் தங்குவார் சாதாரண நாற்காலியில் அமர்ந்து எழுதுவார். மர பெஞ்சில் படுத்துதான் தூங்குவார்.



**வழக்கறிஞர். வெ.அன்புவாணன்**
கொள்கை பரப்பு துணைச் செயலாளர்.

அண்ணாவை அடுத்த தலைவர்களான தலைவர் கலைஞர், நாவலர் நெடுஞ்செழியன், என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன், பேராசிரியர், ஆசைத்தம்பி, கவிஞர் கண்ணதாசன் முதலியோர் அந்த மேல் தளத்தில் தான் அண்ணாவோடு அமர்ந்து அரசியல் களம் பற்றியும், சமுதாய நிலை பற்றியும் மணிக்கணக்கில் விடிய, விடிய பேசுவார்கள்.

இன்றைக்கு நினைத்துப் பார்த்தால், தெள்நீர் கயத்து சிறு மீன் சினை போன்றிருந்த இயக்கம் இன்று கோடிக்கணக்கான தொண்டர்களுக்கு கொள்கை நிழல் தரும் விருட்சமாக வளர்ந்து, பெருகி வலுவுடன் நிற்கிறது. தனது அறிவுநடை பேச்சால், எளிய, இனிய பண்பினால் தொண்டர்கள் கூட்டத்தை தொகை, தொகையாய் தன்பக்கம் கவர்ந்தார் நமது காஞ்சித்தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

உலக வரலாற்றில் தம்பிக்கு என, தொப்புள்கொடி உறவென விளித்து, கடிதமெழுதி, நாட்டின் நடப்பைச் சொல்லி, அதில் நமது இனத்திற்கு எழும் கேட்டை விவரித்து படிக்கும் ஒவ்வொரு இளைஞனும், அண்ணா தனக்கென்றே எழுதியிருக்கிறார் என்ற உணர்வை ஏற்படுத்தினார். அண்ணா. அதனால்தான் அவரது பேச்சிற்கு, போராட்ட அழைப்பிற்கு அலை அலையாக இளைஞர்கள் மாணவர்கள் வந்து சேர்ந்த வண்ணமிருந்தனர்.

இந்தியாவில் எத்தனையோ இயக்கங்கள் தோன்றின. ஆனால் எந்த இயக்கமும் இப்படி ஒரு கொள்கையை வடித்தெடுத்து, வாடிய மக்களின் வாட்டம் போக்கி, ஏற்றம் தந்திட தங்களையே அர்பணித்துக் கொண்ட தலைவர்களை, தொண்டர்களைப் பெற்றிருந்ததில்லை.

நாம் வரலாற்றின் பக்கங்களை திரும்பிப்பார்த்தால், தனவந்தர்கள் நிறைந்த கட்சிகள், ஜமீன்தார்களும், சரிகை குல்லாய்களும், கேளிக்கையாய் நடத்திய கட்சிகள், அந்நியர்க்கு அடிமை சேவகம் புரிந்து, அவாளுக்கு மட்டுமே அப்பாயிண்ட் பெற்ற கட்சிகள், தபால் கார்டில் மட்டுமே கட்சி என எத்தனையோ கட்சிகள் இருந்தன.

ஆனால் அப்படி எல்லாம் இல்லாமல், கிளைக்கழகம், வட்டக்கழகம், மாவட்ட கழகமென உறுதியான கட்டமைப்பை ஏற்படுத்தி, உரமூட்டி, என்றும், எவராலும் அசைக்க முடியாத எஃகு கோட்டை இதுவென மாற்றாரும் மனதிற்குள் வியந்து பாராட்டும் மகோன்னத இயக்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகம்!

இயக்கத்திற்கென்று வகுத்துக் கொண்ட கொள்கை, கோட்பாடுகளில் இம்மியளவும் மாற்றம் கொள்ளாமல், வேண்டினால், பொதுக்குழுவைக் கூட்டி, விவாதித்து, திருத்தங்கள் கண்ட இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்!

அண்ணா கழகத்தை ஆரம்பித்த அடுத்து ஐந்தாண்டுகளில் அடுத்த பொதுச்செயலாளர் தேர்வு செய்யப்பட வேண்டிய நிலையில் ஒரு நாள் அண்ணா அவர்கள் அன்பகத்தில் அன்புத்தம்பியர், தோழர்கள் சிலருடன் அமர்ந்திருந்த வேளையில் , "இந்த முறை நான் பொதுச்செயலாளராக வராமல், தம்பி நெடுஞ்செழியனை கொண்டு வரலாம் என்று நினைக்கிறேன்". என்றார்.

சற்றும் தாமதிக்காத அருகிருந்த ஆசைத்தம்பி, " அதை எப்படியண்ணா, நீங்கள் முடிவு செய்வீர்கள்? அதை கழகப் பொதுக்குழுதானே, தீர்மானிக்க வேண்டும். " என்றார். அமைதியே வடிவான அண்ணா, "உண்மைதான் தம்பி! ஆனால் அப்படி ஒரு நிலை வரும் போது எனது ஆதரவு நெடுஞ்செழியனுக்குத் தான். " என்றார். அந்த முறை நாவலர் நெடுஞ்செழியனே பொதுச்செயலாளராக தேர்வும் பெற்றார்.

தனக்கு பிறகு திறமையான, வலிமையான தலைமையை தேர்ந்தெடுப்பவனே ஆகச்சிறந்த தலைவனாவான் என்பார்கள். அப்படித்தான் அண்ணா அவர்கள் 1961 ல் தலைவர் கலைஞரை பொதுச்செயலாளராக கொண்டு வர விருப்பம்மிகக் கொண்டிருந்தார்.

அண்ணாவின் எண்ணத்தை அன்று சிலர் முன்னரே அறிந்திருந்ததால், பகைமை கருத்துக்களை விதைத்து, வெண்பட்டு அண்ணாவின் இதயம் புண்பட்டு கலங்கிடச் சூழ்ச்சிகள் பல புரிந்து, இறுதியில் தலைவர் கலைஞரே இயக்கப் பொறுப்புகள் அனைத்திலுருந்தும் தான் விலகிக் கொள்வதாக அன்னைநிகர் அண்ணாவுக்கு அஞ்சல் தீட்டி, அண்ணா ஏற்கமுடியாத நிலையிலும், வேறு வழியின்றி தலைவர் கலைஞர் அவர்கள் மறுக்க முடியாத வண்ணம் கழகத்தின் பொருளாளராக்கினார்.

இப்படி ஜனநாயகம் தழைக்க வழிவகுத்த அண்ணா அவர்கள் ஒன்றுபட்ட எங்கள் செங்கற்பட்டு மாவட்டத்தில் பொதுக்குழு உறுப்பினருக்காக போட்டியிட்டார். மாவட்டப் பிரதிநிதிகளின் வாக்குகளைப் பெற்றே, பொதுக்குழு உறுப்பினரானார்.

பொதுக்குழு உறுப்பினருக்கு வாக்களிக்கும் தகுதிபடைத்தோராக மாவட்டப் பிரதிநிதிகள் இருந்தனர். ( மாவட்டப்பிரதிநிதி என்ற நிலையில் எனது தந்தை கோ.. வெற்றிவீரனும், வட்டக் கழகச் செயலாளர் எனும் தகுதியில் மீஞ்சூர் மு. கேசவன் போன்றோர் அண்ணாவிற்கு வாக்களித்த பேறு பெற்றவர்கள் )

இத்தகு ஜனநாயக மாண்பு தழைத்தோங்கியதால் தான் இயக்கத்திற்கு ஏற்பட்ட சோதனைகளை, பிளவுகளை சரி செய்ய, சந்திக்க முடிந்தது.

ஒரு மாநிலக்கட்சி, சந்தித்த முதல் சட்டமன்றத் தேர்தலில் 15 உறுப்பினர்கள், அடுத்த ஐந்தாண்டுகளில் 50 உறுப்பினர்கள், அடுத்த ஐந்தாண்டுகளில் 138 உறுப்பினர்களைப் பெற்று தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்ததென்றால், தேர்தலில் நிற்கத் தொடங்கி, 10 ஆண்டுகளில் ஆட்சியதிகாரம். இது சுதந்திர இந்தியாவில் எந்த மாநிலக் கட்சியும் நிகழ்த்திடாத இமாலய சாதனை!

இந்த நிலையை அடைய அரும்பெரும் தொண்டாற்றிய, பாடுபட்ட, உழைத்த, தியாகங்கள் ஏற்ற லட்சக்கணக்கானோரின் பாசறை தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

தேர்தல்களில் திமுக தொடர்ந்து வெற்றி பெற்றதென்றால், அண்ணா அவர்கள் கையிலெடுத்த, மக்கள் பிரச்சனைகள், இந்தித் திணிப்பு எதிர்ப்பு போர், தொழிலாளர்கள் பிரச்சனைகள் , மாணவர் கிளர்ச்சி இவை அனைத்திலும் உணர்வுடன் ஒன்றுபடுத்தி, புதிய பிரச்சார உத்திகளைக் கொண்டு உழைத்ததால் கிடைத்தது தான் தேர்தலில் ஈட்டிய வெற்றிகள்.

" ராமநாதபுரம் ராஜா, செட்டிநாட்டு அரசர்கள், ஆலை முதலாளிகள், குட்டிக் குபேரர்கள், கொட்டமடிப்பது காங்கிரஸ் கட்சி! பாடுபட்டு பிழைப்போரே,

உழைத்து உருகுலைந்தோரே, உங்கள் கட்சியாக காங்கிரஸ் கட்சி இருக்கமுடியுமா? "

" புள்ளிமான் குட்டிக்கு, புலியா, பால் கொடுப்பது? எந்த கட்சி உங்கள் சொந்தக்கட்சி? " என்பன போன்ற பிரச்சார வியூகங்கள் சாதாரண அடித்தட்டு மக்களை, காலகாலமாய், பண்ணைகளிடமும், ஆலை, தோட்ட முதலாளிகளிடமும் உழைத்து, களைத்த ஏழைகளுக்கு அபயக் குரல் கொடுத்ததால் அது பெரும் ஆதராக மாறியது.

இதுமட்டுமின்றி, அன்றைய காலகட்டத்தில் அண்ணாவும், நாஞ்சில் கி.மனோகரனும், ஆங்கிலத் தலைப்புகளில் ஒற்றைவாடைத் தெருவில் ( வால்டாக்ஸ் ரோடு ) உரையாற்ற , கட்டணம் வைத்து, கட்சி நடத்திய அதிசயத்தை அப்போதே திமுக நிகழ்த்தியது.

1965 ஏற்பட்ட மாணவர் புரட்சி, அதில் அண்ணாவின் தலைமை, தலைவர் கலைஞரின் தியாகம், கழக போர்வாள் முரசொலியின் முழக்கம் சாதாரணமானதல்ல. ஒவ்வொரு நாளும், அண்ணா, கலைஞரின் பேச்சினை, எழுத்தாய் தாங்கி வந்த முரசொலி, மொழிப் பிரச்சனையில் வீறுகொண்ட மாணவர் படைக்கு, வேலாக, வாளாக, கேடயமாகவே திகழ்ந்தது.

அதனால் தான் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது, திமுக தலைவர்களில் தலைவர் கலைஞர் மட்டுமே, மாணவர் கிளர்ச்சியை தூண்டினாரென்று பாதுகாப்பு தடை சட்டத்தில் கைது செய்யப்பட்டு பாளைச் சிறையில் அடைக்கப்பட்டார்.

எவ்வளவோ தியாக நிகழ்வுகள், வரலாற்று பேருண்மைகளை தன்னகத்தே, நிரப்பி தளராது நடைபோடுகிறது நம் கழகம்!

ஆட்சியதிகாரம் வந்ததும் அண்ணா, தன்னை அரசியலில் ஆதரித்து, அடையாளம் காட்டிய ஐயா பெரியாருக்கு தனது ஆட்சியே காணிக்கை என அவரின் மனம் மகிழச்செய்தார்.

அண்ணாவின் ஆட்சி கொண்டு வந்த 'தமிழ்நாடு' பெயர் மாற்றத் தீர்மானமென்பது சாதாரண விஷயமா? காங்கிரஸ் ஆட்சியில் காங்கிரஸ் இயக்கத்தை சார்ந்த சங்கரலிங்க நாடார் பலநாள் பட்டினிபோராட்டம் நடத்தி, அது பலனளிக்காமல் மாண்டுபோனாரே!

அந்த தியாகியின் வேண்டுதல் நிறைவேற, திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இயக்கம் ஆட்சி கட்டிலில் அமர்ந்து தான், அண்ணா எனும் மகத்தான தலைவர் தமிழ்நாடு எனும் பெயர் வைத்தார்.

அவருக்கு பின் வந்த தலைவர் கலைஞர், தீட்டிய திட்டங்கள் அடித்தட்டு மக்களின் அவலநிலையை போக்கிடத்தானே பயன்பட்டது!

குடிசை மாற்று வாரியம், கைரிக்ஷா ஒழிப்பு, விதவைகள் மறுமண திட்டம், பிச்சைக்காரர் மறுவாழ்வு திட்டம், ஆலய பிரவேச சட்டங்கள், அடுக்கு மாடி குடியிருப்புகள், இலவச மின்சாரம், திருமண உதவி திட்டங்கள், ஏழை மாணவர் கல்விக் கட்டண சலுகைகள் என சொல்லிக் கொண்டே போகலாம்.

ஆட்சியதிகாரத்தில் இத்தனைப் பணிகள், அரசியல் களத்தில் சமரசமில்லாத சமர்கள்! உறவிற்கு கை கொடுத்து, உரிமையை பெறுவதற்கு இன்று வரை கொடுக்கும் குரல்கள்! இவை திமு கழகத்தின் தனித்தன்மையை உலக அரசியல் அரங்கிற்கே வியப்பை, அளிப்பதாகும்.

நெருக்கடி நிலையின் போது, அதை தீரமுடன் எதிர்த்து சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்றிய முதல் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். அதுமட்டுமின்றி "ஹிட்லராகிறார் இந்திரா" எனும் கருத்துப்படம் வெளியிட்டு, அதை 'நியூஸ்வீக்' பத்திரிகை அப்படியே வெளியிட்டு, உலக அரங்கில் தனது போராட்ட குணத்தை மெய்ப்பித்துக் கொண்ட இயக்கம் திமுக.

இந்திய பாராளுமன்ற முறை என்பது ஐரோப்பிய பாராளுமன்ற சட்டமுறையைச் சார்ந்தது என்பர். அதேபோல் பல மாநில அரசியல் கட்சிகளின் கட்சி, சட்ட வடிவமைப்புகள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்ட திட்டங்களை பின்பற்றியே அமைந்திருக்கிறது. அதனால் தான் இன்றைய ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அவர்கள்,

"தலைவர் கலைஞர் திமுக விற்கு மட்டும் தலைவரல்ல! எனக்கும் அவர் தான் தலைவர் என்றார்."

இத்தகு பெருமைகளை, போராட்ட வடுக்களை, இன்னும் தீராத வலிகளை, என்றும் மறையாத தியாக நிகழ்வுகளை, மிகச் சாதாரணமாய் பழகிய தலைவர்களை தளகர்த்தர்களைக் கண்ட, கொண்ட இயக்கம் தான் இன்று பவளவிழாவை பார்போற்ற கொண்டாடி மகிழ்விருக்கிறது. பல்லவத் தலைநகர் காஞ்சிமா நகரில்!

தெருவெல்லாம், திரும்பிய பக்கமெல்லாம் ஆலயங்கள் கொண்ட காஞ்சியில் அறிவாயுதமேந்திப் புறப்பட்டு, ஆயிரமாயிரம் தம்பியரை அறிவுசார் விற்பன்னர்களாக்கிய, அறிவியக்க ஆதவன் அண்ணா அவதரித்த காஞ்சிபுரத்தில்!

அவரது பேச்சுக் காற்றும், மூச்சுக்காற்றும் உலவும் திராவிட திருநகரில், எந்த காங்கிரசு இயக்கத்திற்காக தனது பெரும் சொத்தை, கடும் உழைப்பை பெரியார் நல்கினாரோ, அந்த காங்கிரஸில் சமத்துவம் இல்லை! ஏழைப் பணக்கார ஏற்றத் தாழ்வுகள் இன்னுமிருக்கிறது என்று, தான் காங்கிரஸை விட்டு வெளியேறுகிறேன் என்று காஞ்சியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் இருந்து வெளியேறி, சேலத்தில் நடைபெற்ற நீதிக் கட்சி மாநாட்டில் தன்னை இணைத்துக் கொண்டாரோ அதே காஞ்சியில்!

'நம்நாடு' பத்திரிக்கைக்கு சென்னை அன்பகம் என்றால், 'திராவிட நாடு' பத்திரிக்கைக்கு காஞ்சி! என்று தம்பிக்கும், தமிழினத்திற்கும் அழகு தமிழில் அரிய கருத்துக்கள் பல தீட்டினாரோ, அந்த காஞ்சிக்கு!

களம் பல அமைக்க திட்டங்கள் தீட்டினாரோ, அதே காஞ்சிக்கு!

இதோ இன்றைய நம் தலைவர், வளமார் திராவிடத்தின் நலன்காக்கும் நம் வாய்மையுரு முதல்வர் அழைக்கிறார்!

"அழைக்கின்றார்; அழைக்கின்றார்! அழைக்கின்றார் அண்ணா!"

"அன்பில் அழைக்கிறார்!" எனும் கழகத்தோழர்களின் இதயம் பதிந்த வரிகளைப் போல் இன்று அழைக்கிறார் நம் தலைவர்! கல்லெல்லாம் சிலைசெய்த, நரசிம்ம பல்லவனின் தலைநகராம் காஞ்சிக்கு!

அன்றைய ஒன்றிணைந்த செங்கற்பட்டு மாவட்டத்தில் தொண்டை மண்டலத்தில் அமைந்த காஞ்சிக்கு!

ஏமாற்றம் ஏதுமின்றி, ஏற்றங்களை, மாற்றங்களை கூற வல்ல, பவளவிழாவிற்கு!!

கடைசி தொண்டனின் அடிமனதின் ஆழத்தை அறியும் ஆற்றல் மிக்க தலைவர் அழைக்கிறார்!

'திராவிட இயக்கத்தின் முதல் பாதியை நான் எழுதியிருக்கிறேன். மீதியை தம்பி கருணாநிதி தொடருவார்' என்ற அரசியல் தீர்க்கதரிசி அண்ணாவின் மண்ணில் அடுத்தடுத்து இயக்கம் பயணிக்க, தொடர வேண்டிய திட்டங்களை, தீர்மானங்களை அறிவிக்கவிருக்கும் அரிமா நோக்கு கொண்ட தலைவர் அழைக்கிறார்!!

அண்ணாவின் தம்பிகள், கலைஞரின் உடன்பிறப்புகள், தளபதியின் தோழர்கள் என வகை, வகையாய் புறப்படுவோம்!

வலிமைமிகு தமிழினத்தின் வருங்காலம் நலம்பெறவே!

அதோ, அண்ணாவின் குரல் அழைக்கிறது!

நமது கண்ணான கலைஞர் காட்டிய வழியில் கழகம் காக்கும் தளபதியவர்களின் வடிவில்!

வாழ்க! வாழ்கவே! வாழ்வே!

வளமார் திராவிட முன்னேற்றக் கழகம் வாழ்க! வாழ்கவே! வாழ்கவே!